பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 10 2024 7 15

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் –</u>

1. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற லட்சிய இலக்கை எட்டுவதற்கு மும்பை, தானே நகரங்கள் உறுதுணையாக இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. ஹரியானா மாநில சட்டப்பேரவை தேர்தலில் இன்று மாலை ஐந்து மணி நிலவரப்படி 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
3. ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின்போது பாகிஸ்தானுடனான உறவுகள் குறித்து இந்தியா விவாதிக்காது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
4. இடஒதுக்கீட்டில் 50 சதவீத உச்சவரம்பை நீக்கவும், நாடு முழுவதும் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவும் காங்கிரஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.
5. உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Saksham Yadav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற லட்சிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மும்பை, தானே நகரங்கள் தயார் நிலையில் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் தானேயில் மெட்ரோ மற்றும் நெடுஞ்சலை திட்டங்களை தொடங்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் பேசிய பிரதமர், மும்பையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடல் சேது மெட்ரோ மற்றும் கடற்காரை சாலை போன்ற உள்கடடமைப்பு திட்டங்கள் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்வதாகத் தெரிவித்தார்.

உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் மூலம் தொழில் வளர்ச்சியடைவதோடு, புதிய வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

மகாராஷ்டிரா மாநிலம் **Washim**-மில் 23 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் மற்றும் கால்நடை வளர்ச்சிக்கான திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்து பேசினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்கு திட்டத்தி.ன் அடித்தளமாக விவசாயிகள் விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் வளர்ச்சியை நோக்கியே இருப்பதாக அவர் கூறினார்.

**Panjara** பழங்குடியின மக்களின் வளமான கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் போகறா தேவியில் கட்டப்பட்டுள்ள அருங்காட்சியகத்தையும் பிரதமர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அரசின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 18-வது தவணை நிதியாக 20 ஆயிரம் கோடி ரூபாயை ஒன்பது கோடியே 40 லட்சம் விவசாயிகளுக்கு பிரதமர் விடுவித்தார்.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த 90 லட்சம் விவசாயிகளுக்கு மாநில அரசின் ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி நிதி உதவியையும் பிரதமர் வழங்கினார்.

அப்போது பேசிய பிரதமர், நாட்டை வளர்ச்சிப்பாதையில் நடத்திச் செல்வதற்கு உதவும் வகையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏராளமான வளங்கள் நிறைந்திருப்பதாகக் கூறினார்.

ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கான அதிகாரத்தை உறுதி

செய்வதற்கான நடவடிக்கையையும் மகாராஷ்டிரா அரசு எடுத்து வருவதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாட்டின் வடகிழக்கு மாநிலங்கள் நாட்டின் இதயமாகவும், உயிர்நாடியாகவும் விளங்குகின்றன என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்,

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளமான கலாச்சாரம், பண்பாடு, இயற்கை அழகு ஆகியவற்றை உள்ளடக்கி பூகோள ரீதியாகவும், இந்தியாவிற்கு வடகிழக்குப் பகுதி பெருமை சேர்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

இப்பகுதிவாழ் மக்களின் ஆன்மீக கலாச்சாரமும், உணவு முறைகளும் மக்களின் அயராத உழைப்பும் போற்றுதலுக்குரியது என்று அவர் கூறினார்.

அஸ்ஸாமிய மொழி தொன்மை சிறப்புமிக்க மொழி என அங்கீகாரம் கிடைத்திருப்பதை குடியரசு துணைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கும், சுற்றுலா மேம்பாட்டிற்கும் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இஸ்லாமாபாத்தில் இம்மாதம் 15, 16 தேதிகளில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின்போது பாகிஸ்தானுடனான உறவுகள் குறித்து இந்தியா எந்த ஒரு விவாதத்திலும் பங்கேற்காது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஷாங்காய் உச்சிமாநாட்டில் தாம் கலந்து கொள்ளும்போது உறுப்பு நாடுகளுடன் வேறுபல விஷயங்கள் குறித்தும் ஆலோசிக்க உள்ளதாகக் கூறினார்.

சார்க் நாடுகள் கூட்டமைப்பு குறித்து பேசிய திரு ஜெய்சங்கர், கடந்த சில ஆண்டுகளில் இந்த கூட்டமைப்பின் சார்பில் கூட்டங்கள் நடத்தப்படாததற்கு குறிப்பிட்ட ஒரு நாட்டின் தவறான நடவடிக்கையே காரணம் என்று அவர் கூறினார்.

அந்த நாடு ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருப்பதுதான் இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சார்க் கூட்டமைப்பில் உள்ள ஒரு நாடு பயங்கரவாதத்திற்கு துணைப்போவதை ஏற்க முடியாது என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இடஒதுக்கீட்டில் 50 சதவீத உச்சவரம்பை நீக்கவும், நாடு முழுவதும் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவும் காங்கிரஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் கோலாப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க இந்த இரண்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

ஜாதிவாரி கணக்கெடுப்புடன் சமூக பொருளாதார ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் முக்கிய அமைப்புகளில் அனைத்து சமூக மக்களும் இடம்பெறுவதை இந்த கணக்கெடுப்பு உறுதி செய்யும் என்றும் திரு ராகுல்காந்தி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநில சட்டப்பேரவைக்கு இன்று ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில் மாலை ஐந்து மணி நிலவரப்படி 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

அம்மாநிலத்தில் உள்ள 90 தொகுதிகளுக்கு இன்று நடைபெற்ற தேர்தலில் ஆயிரத்து 31 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

வாக்குப்பதிவுக்காக 20ஆயிரத்து 632 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு பங்கஜ் அகர்வால், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும், வாக்குப்பதிவு வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசு 65 சதவீத தொகையை வழங்குகிறது என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சமீபத்தில் மத்திய அரசு அளித்துள்ள ஒப்புதலின் அடிப்படையில் சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டப்பணிகளுக்கு 33 ஆயிரத்து 593 கோடி ரூபாய் கடனாகவும், சமபங்கு மற்றும் சார்நிலை

கடனாக ஏழாயித்து 425 கோடி ரூபாயும் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

எஞ்சிய 35 சதவீத மதிப்பீட்டுச் செலவுக்கான நிதி உதவியை மாநில அரசு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு மற்றும் இருதரப்பு முகமைகளிடமிருந்து பெறப்படும் கடன்கள் மத்திய அரசின் பட்ஜெட்டிலிருந்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக மத்திய அரசு அளித்த ஒப்புதலை அடுத்து, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகிய இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளுடன் மத்திய நிதி அமைச்சகம் பேச்சுவார்த்தை நடத்தி அது தொடர்பான ஆவண நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பான்னாட்டு முகமைகளிடமிருந்து பெறப்படும் கடன்தொகை மாநில அரசுக்கானதாக இல்லாமல், மத்திய அரசுக்கானதாகவே கருதப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும், மாநில அரசின் ஒத்துழைப்போடு இது விரைந்து முடிக்கப்படும் என்றும் நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் தொடர்ச்சியாக மின் தடை ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி நிரந்தர தீர்வுகாண வேண்டுமென்று மின்வாரிய அதிகாரிகளுக்கு மாநில மின்துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைக்குமாறு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

மாநிலத்தில் மின்சார தேவைக்கும், மின் விநியோகத்திற்கும் எவ்வித இடைவெளியும் இல்லை என்று கூறிய அவர், எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்துள்ளதாக அவர் தெரிவீத்தார்.

மின்னகத்தின் மூலம் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள 28 லட்சத்திற்கும் மேற்பட்ட புகார்களில் 99 புள்ளி எட்டு சதவீத புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு செந்தில்பாலாஜி கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் ஏரி குளங்களில் மூன்று லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கும் திட்டத்தை ஆட்சியர் திரு சி பழனி இன்று தொடங்கி வைத்தார்.

இம்மாவட்டம் முழுவதும் 150 ஏக்கர் பரப்பளவில் உள்ள நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) ----32 செகண்ட்*

**[]<<<>>>[]**

உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Saksham Yadav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

தென்கொரியாவின் **Chuncheon**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 42 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.